Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — STC. 13/2023
Sessions prosecution
depositions of witness for — PW1 cross

| | | |
|---|---|---|
| Time | : | 4.35pm – 5.03 pm |
| Name | : | திரு. சுரேஷ்குமார் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 09th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

குறுக்கு விசாரணை

1) எனது மனைவி பெயர் சவிதா ஆவார். நானும், எனது மனைவியும் தற்போது வரை நல்ல உறவு முறையில் தான் இருக்கிறோம் என்றால் சரிதான். எனது மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் தற்போது வீட்டில் தான் இருக்கிறார். இதற்கு முன்பு என்ன வேலை செய்து கொண்டு இருந்தார் என்றால் எக்போர்ட் கம்பெனியில், நர்சரியிலும், டிப்பார்ட்மெண்ட் ஸ்டோரிலும் வேலை செய்து கொண்டு இருந்தார். எனது மனைவிக்கு டெய்லரிங் தெரியும் என்றால் இல்லை. துணிகளை கட்டிங் செய்து தரும் பிரிவில் பணிபுரிந்து

வந்தார் என்றால் ஆமாம். லேயராக பணிபுரிந்து வந்தார். கௌரம்மா சிறியதாக 4 நபர்களை வைத்து கார்மெண்ட்ஸ் நடத்தி வந்தார் என்றால் இல்லை. பெரிய அளவில் சுமார் 30 நபர்கள் வைத்து நடத்தி வந்தார். எனது மனைவி கௌரம்மாவின் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் ஆமாம். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை எனது மனைவி கௌரம்மாவிடம் பணிபுரிந்து வந்தார் என்றால் 2016 ல் இருந்து 3 முதல் 4 மாதங்கள் வரை பணிபுரிந்தார்.

2) மணி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. கௌரம்மாவின் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார் அது தெரியும். கௌரம்மாவின் SV Fashions என்ற நிறுவனம் எந்த தேதி வரை இயங்கி வந்தது என்றால் எனது மனைவிக்கு சரியாக சம்பளம் கொடுக்கவில்லை என்பதால் 4 மாதங்களில் எனது மனைவி வெளியில் வந்த பிறகு அந்த நிறுவனத்தை பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 26/01/2022 ல் பணம் கொடுத்தேன். எனது புகார் மனுவில் பக்கம் 2 ல் பத்தி 5 ல் சாட்சிகள் முன்னிலையில் எதிரிக்கு ரூ.1,10,000/- ம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சிகளின் பெயர்களை குறிப்பிட்டு வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் எனது வழக்கில் சாட்சிகளின் பட்டியலிலும் நான் சொன்ன சாட்சிகளின் பெயர்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) எனது புகார் மனுவில் பக்கம் 2 ல் பத்தி 5 ல் எதிரி வழக்கு காசோலைகளை ரூ.80,000/க்கும், ரூ.30,000/-க்கும் பூர்த்தி செய்து 26/04/2022 என்று பின் தேதியிட்டு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலைகளில் தொகை கருப்பு நிற மையினாலும், தேதி பெயர் ஆகிய விவரங்கள் நீல நிற மையினாலும் உள்ளது என்றால் சரிதான். பு.த.சா.ஆ. 1 காசோலையில் எதிரியின் கையொப்பம் நீல நிற மையினாலும், பு.த.சா.ஆ. 2 காசோலையில் எதிரியின் கையொப்பம் கருப்பு நிற மையினாலும் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் நிறுவனத்தின் சரியான பெயரை எனது சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கறிஞர் தான் தயார் செய்தார். வழக்கு காசோலைகள் SV Fashions என்ற பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் SV Fashions என்ற நிறுவனத்தின் முகவரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். SV Fashions என்ற நிறுவனத்தின் Proprietor கௌரம்மா என்று எனது சட்ட அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் காட்டவில்லை என்றால் சரிதான். எனது சட்ட அறிவிப்பில் புகார்தாரரின் SV Fashions என்ற நிறுவனத்தை பற்றி குறிப்பிடாமலும் SV Fashions என்ற நிறுவனத்திற்கு சட்ட அறிவிப்பு அனுப்பாததாலும், நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு செல்லாது என்றால் சரியல்ல.

4) கௌரம்மாவை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது மனைவி அவருடைய நிறுவனத்தில் வேலை பார்த்ததால் எனக்கு தெரியும். நாங்கள் அவருடைய வீட்டிற்கு

சென்று வருவோம். கௌரம்மாவுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன், மகள் மகன் பெயர் சீனிவாசன், மகள் பெயர் தெரியவில்லை. கௌரம்மாவின் கணவர் பெயர் குர்ரப்பா அவர் EB ல் வேலை செய்து தற்போது ஓய்வு பெற்று விட்டார். SV Fashions என்ற நிறுவனம் கொரோனா காலத்தின் காரணமாக மூடப்பட்டு விட்டது என்றால் தெரியாது. மார்ச் 2020 ல் இருந்து புகார்தாரர் நிறுவனம் செயல்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. புகார்தாரர் நிறுவனம் செயல்படுகிறதா செயல்படவில்லை என்று எனக்கு தெரியாத பட்சயத்தில் 2022 ல் புகார்தாரருக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5) எனது சட்ட அறிவிப்பில் காசோலையை வசூல் செய்வதற்கு முன்பு புகார்தாரரிடம் பேசியதாக சொல்லியுள்ள நிலையில் எங்கு வைத்து பேசினேன் என்றால் புகார்தாரரின் வீட்டில் வைத்து பேசினேன். அப்போது என்னுடன் யார் வந்தார்கள் என்றால் எனது மனைவி வந்தார். எனது மனைவியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,

குற்றவியல் நீதித்துரை நடுவர்

விரைவு நீதிமன்றம்

ஒசூர்.